பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 15 வியாழக்கிழமை 30.12.2021 கதிர் 283

## வீட்டுக் கிணற்றிலிருந்து சிறுமியின் சடலம் மீட்பு!

புத்தளத்தில் சிறுமி ஒருவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கருவலகஸ்வெள, சியம்பலேவ கிராமத்தில் 15 வயதுடைய சிறுமியின் சடலமே அவரின் வீட்டிலுள்ள கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

☞2

# வடக்கு சுகாதாரத் தொழிற்சங்க உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக யாழில் மாபெரும் போராட்டம்



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

சுகாதாரத் தொழிற்சங்கக் கூட்டமைப்புடன் இணைந்து நாடு தழுவிய ரீதியில் மாகாண ரீதியாக நடத்தப்படும் தொழிற்சங்க நடவடிக்கை இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இன்று காலை 10.30 மணியளவில் வடக்கு மாகாணம் முழுவதும் உள்ள சுகாதாரத் தொழிற்சங்க உறுப்பினர்கள் கவனவீர்ப்புப் பேரணியை முன்னெடுத்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் 'சுகாதாரத் துறையை அழிக்காதே, சுகாதார நிர்வாக சேவையை

☞2

## காரைநகரின் தவிசாளராக அப்புத்துரை

சுயேச்சைச் குழு ஆட்சி

(ந.லோகதயாளன்)

யாழ்., காரைநகர் பிரதேச சபையின் புதிய தவிசாளராக சுயேச்சைச் குழுவைச் சேர்ந்த மயிலன் அப்புத்துரை போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற தவிசாளர் தெரிவில் சுயேச்சைக் குழுவைச்

☞2

## பூநகரியின் தவிசாளராக சிறி ரஞ்சன்

(ந.லோகதயாளன்)

பூநகரி பிரதேச சபையின் புதிய தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சி. சிறிரஞ்சன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தல்

☞2

# சம்பந்தன் - ஹக்கீம் நாளை நேரில் பேச்சு

## மனோவும் பங்கேற்பார் எனத் தெரிவிப்பு



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் முக்கியத்துவமிக்க சந்திப்பு நாளை கொழும்பில் நடைபெறவுள்ளது.**

**இரா. சம்பந்தன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கூட்டமைப்பின் சார்பிலும், ரவூப் ஹக்கீம் உள்ளிட்டவர்கள் மு.கா. சார்பிலும் பங்கேற்கவுள்ளனர்.**

☞2

## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு மனோ எம்.பி. முன்னெச்சரிக்கை



என்னை ஏன் விசாரணைக்கு அழைத்தோம் என விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சிந்திக்க வேண்டிவரும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

படம் சும்மா ஓடம்..! இதற்கும், செய்திக்கும் தொடர்பில்லை. கையில் கத்தியுடன் போகும் எண்ணம் எதுவும் இல்லை...!

நேற்றுக் காலை

☞2

## உள்நோக்கம் இருப்பின் கையொப்பமிடமாட்டோம்!



திகாம்பரம் அதிரடி

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் நோக்கோடு தமிழ்க் கட்சிகளின் கூட்டணி செயற்படுமாக இருந்தால் கூட்டு ஆவணத்தில் கையொப்பம் இடுவோம். உள்நோக்கம் ஏதேனும் இருப்பின் கையொப்பமிடமாட்டோம்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அங்கம் வகிக்கும் தொழிலாளர் தேசிய சங்கம் அறிவித்துள்ளது.

☞2

# மஹிந்த தலைமையிலான 'மொட்டு' அரசை கலைக்கவும் முடியாது; கவிழ்க்கவும் முடியாது

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் திட்டவட்டம்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவராகவும் இந்த அரசின் பிதாமகனாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே உள்ளார். அவர் தலைமையிலான ஆட்சியை இனி ஒருபோதும் கலைக்கவும் முடியாது; கவிழ்க்கவும் முடியாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரும் வெளிவிவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

'மொட்டு' அரசு விரைவில் கவிழும் என சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணியினர் வெளியிட்டு வரும் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்ற இந்தக் கட்சியை ஆரம்பிக்கும்போது நாம் பல சவால்களை எதிர்கொண்டோம்.

☞2



## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்கு நான் போகவில்லை. குறைந்த அவகாசம் காரணமாக, நேற்று தவிர்க்க முடியாத காரணத்தால், நான் சமூமளிக்க முடியாது. ஜனவரியில் வேறொரு நாள் தாருங்கள் என ஆணைக்குழுவுக்கு அறிவித்து விட்டேன்.

அடுத்து, இந்த ஆணைக்குழு என்னை அழைத்ததன் காரணம் சரியாக விளங்கிக்கொள்ளப்பட வேண்டும். இது ஊழல் விசாரணை ஆணைக்குழு அல்ல.

கடந்த அரசின் போது, அதற்கு முந்தைய மஹிந்த ராஜபக்ஷ அரச அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளை பற்றி விசாரிக்க, அப்போது ஒரு அமைச்சரவை குழு அமைக்கப்பட்டதாகக் கூறி, அது பற்றி விசாரிக்கவே இவர்கள் என்னை அழைக்கின்றார்கள்.

இதற்கு முதல், சட்டமா அதிபரிடம் கூறி வழக்குகளை வாபஸ் வாங்கி, முந்தைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஊழல் குற்றம் சாட்டப்பட்டவர்களை, இவர்கள் விடுவித்து விட்டார்கள்.

இதுபோதாதுஎன்று இப்போது, இலஞ்ச ஊழலை விசாரித்தவர்களை இவர்கள் விசாரிக்கிறார்களாம். எப்படி கதை?

அடுத்தமாதம், நான் அங்கே போனால், நான் தரப்போகும் சாட்சியம் காரணமாக, என்னை ஏன் அழைத்தோம் என யோசிக்கப் போகின்றார்கள் – என்றுள்ளது.

## உள்நோக்கம் இருப்பின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹற்றனில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, இந்தியப் பிரதமருக்கு அனுப்பும் நோக்கில் தமிழ் பேசும் கட்சிகளால் கைச்சாத்திடப்படவுள்ள கூட்டு ஆவணம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி. மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

## மஹிந்த தலைமையிலான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், அந்தச் சவால்களை முறியடித்து தனிப் பெரும் கட்சியாக பொதுஜன முன்னணியை வளர்த்தெடுத்துள்ளோம். இதற்கு மக்களின் அமோக ஆதரவே முக்கிய காரணம்.

இப்போது எவராலும் அசைக்க முடியாத மாபெரும் கட்சியாக – கூட்டணியாகப் பொதுஜன முன்னணி திகழ்கின்றது.

எதிரணியினர் நினைப்பது போல் பொதுஜன முன்னணிக்குள் முரண்பாடுகள் எதுவும் இல்லை.

இங்கு கருத்துச் சுதந்திரத்துக்கு இடமுண்டு. எவரும் கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவிக்க முழுச் சுதந்திரம் உண்டு.

ஒரு சிலரின் உணர்ச்சி மிகுந்த கருத்துக்களை வைத்துக்கொண்டு எதிரணியினர் அரசியல் நடத்துகின்றனர். எதிரணியினரின் இந்தச் சிறுபிள்ளைத்தனமான அரசியல் பரப்புரைக்கு மக்கள் எவரும் செவிசாய்க்கக்கூடாது.

2022ஆம் ஆண்டில் எமது அரசின் வேலைத்திட்டங்களை நாடெங்கும் விஸ்தரிக்கவுள்ளோம்.

பொருளாதாரப் பாதிப்பிலிருந்து நாம் மீண்டெழுவோம். இந்த நம்பிக்கை இன்னமும் வீண்போகவில்லை – என்றார்.

## வீட்டுக் கிணற்றிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருவலகஸ்வெள, டீ.எஸ்.சேனாநாயக்க வித்தியாலத்தில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் தாய் கூலி வேலை செய்து சம்பாதித்த பணத்தில் சிறுமியின் கல்வி நடவடிக்கைக்காக கையடக்கத் தொலைபேசி ஒன்றை வாங்கிக் கொடுத்துள்ளார்.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய இந்தச் சிறுமி கருவலகஸ்வெள பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனுடன் காதல் தொடர்பு வைத்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞருடன் கடந்த இரு நாள்களாக தொலைபேசியில் தகவல்கள் பரிமாற்றிக் கொண்டுள்ளார். அதன் பின்னர் ஏதோ ஒரு விடயம் தொடர்பில் மன ரீதியான பாதிப்புக்குள்ளாகியிருந்தார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், இது கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சம்பந்தன் - ஹக்கீம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் மனோ கணேசனும் பங்கேற்பார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும், இதற்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு இந்தியா பிரயோகிக்க வேண்டும் எனக் கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கூட்டு ஆவணமொன்றை அனுப்பிவைப்பதற்கு தமிழ் பேசும் கட்சிகள் முயற்சித்தன. இதுவரை மூன்று சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன.

எனினும், சில அரசியல் காரணங்களால் கூட்டு ஆவணத்தில் கையொப்பமிட முஸ்லிம் கட்சிகள் இழுத்தடிப்பு செய்து வருகின்றன. அக்கட்சிகளின் தலைவர்களுக்கு கடும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே நாளை ஹக்கீமை, சம்பந்தன் தரப்பு சந்திக்கவுள்ளது.

முஸ்லிம் தரப்புகள் தொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்யும் பட்சத்தில், தமிழ்க் கட்சிகள் மட்டும் இணைந்து கையொப்பமிடுவது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

## வடக்கு சுகாதாரத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பி, விசேட கொடுப்பனவை உயர்த்து, பொதுமக்களின் ஆரோக்கியத்தில் கவனம் எடு, பதவி உயர்வு முரண்பாட்டைத் தீர்த்து வை, பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக முகக் கவசங்களை வழங்கு, றுணுக்கின் அறிக்கையை நடைமுறைப்படுத்து. போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்தப் போராட்டம் காரணமாக யாழ். நகரப் பகுதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டதுடன் அதனைச் சீர்செய்வதற்காகப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் முன்பகுதியில் இருந்து ஆரம்பித்த பேரணி ஆஸ்பத்திரி வீதியூடாக பலாலி வீதி மற்றும் ஸ்டான்லி வீதிக்குச் சென்று அங்கிருந்து மணிக்கூட்டு கோபுர வீதி ஊடாக யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தை வந்தடைந்தது.

போராட்டக்காரர்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டமையுடன் பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## காரைநகரின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்ந்த செயற்குழு உறுப்பினர் யோகநாதன் முன்மொழிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்த விஜயராஜா வழிமொழிந்தார்.

இதையடுத்து வேறு எந்த முன்மொழிவுகளையும் சமர்ப்பிக்கப்படாத நிலையில், சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த மயிலன் அப்புத்துரை ஏகமனதாகத் தவிசாளராகத் தெரிவுசெய்யப்படுகின்றார் என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்தார்.

மேலும், இன்றைய சபை அமர்வில் தவிசாளர் தெரிவில் சுயேச்சைக் குழுவைச் சார்ந்த மூன்று உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்த மூன்று உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சார்ந்த ஓர் உறுப்பினரும் கலந்துகொண்டனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்த இரண்டு உறுப்பினர்கள் இன்றைய தவிசாளர் தெரிவில் கலந்துகொள்ளவில்லை.

## பூநகரியின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளது.

பூநகரிப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் பதவி இழந்த நிலையில் புதிதாக ஒருவரின் பெயரை கட்சி பரிந்துரைத்தது.

இதற்கமைய முழங்காவில் வட்டார உறுப்பினரும் முழங்காவில் தேசிய பாடசாலையின் பிரதி அதிபருமான சி.சிறிரஞ்சன் தற்போது புதிய தவிசாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## சட்டத்தின் காட்டாட்சி

**நீதி நிலைநிறுத்தப்படுவதிலும், சட்டத்தின் ஆட்சி முழுமையாக நிலவுவதிலும் தான் ஒரு நாட்டின் மாண்பு தங்கியிருக்கின்றது.**

**நாடுகள் தோறும் அந்தந்த நாட்டின் சட்டவாட்சியை நெறிமுறைப்படுத்தும் எழுதப்பட்ட சட்டங்கள், அரசமைப்புச் சட்டம், நியதிச் சட்டங்கள், ஒழுங்கு முறை விதிகள், சுற்று நிரூபங்கள் போன்றவை இருந்தாலும், இவை எல்லாவற்றையும் தாண்டி இயற்கை நீதியாக எழுதப்படாத சட்டங்களும் மேன்மை பெற்று நிற்கின்றன.**

**சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நெறிமுறைகள் நாட்டுக்கு நாடு வேறுபட்டாலும், இந்த இயற்கை நீதி என்ற எழுதப்படாத சட்டம் பெரும்பாலும் நாடுகள் கடந்து பூகோள நெறிமுறையாக, அநேகமாக ஒரே விதமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.**

**எழுதப்பட்ட சட்டங்களில் விசேடமாக குறித்தொதுக்கும் அம்சம் இல்லாவிட்டால் – அல்லது பல சமயங்களில் இப்படி விசேடமான எழுதப்பட்ட சட்டங்கள் இருந்தாலும் – அவற்றையும் தாண்டி, பல நாடுகளில் உயர்வான நீதித்துறைகள் இயற்கை நீதிக்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றன என்பது அவதானிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.**

**இப்படி சட்டத்தின் ஆட்சியை மாண்புபடுத்தும் இயற்கை நீதிக் கோட்பாடுகளையே தூக்கி எறிந்து, உதாசீனப்படுத்தி நடப்பதன் மூலம் சட்டத்தின் ஆட்சி மீறப்பட்ட கொடூர தேசமாக இலங்கை தன்னை முன்னிலைப்படுத்தி நிற்பது தான் அந்த நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் நமக்குக் கிட்டிய துரதிஷ்டமாகும்.**

**சந்தேகத்திற்கு அப்பால் – ஐயத்துக்கிடமின்றி – குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரை எவரும் குற்றவாளியாகக் கருதப்படக் கூடாது என்பது சட்டவாட்சியின் – இயற்கை நீதியின் – அடிப்படைக் கோட்பாடாகும்.**

**ஒரு குற்றவாளி தப்பித்தாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்பது நீதித்துறையின் இயற்கை நீதியின் மற்றோர் அடிப்படைக் கோட்பாடாகும்.**

**ஆனால் இலங்கையின் மோசமான நீதித்துறை ஏற்பாடுகளின் கீழ், குற்றம் நிரூபிக்கப்படாத பலர் சந்தேக நபர்களாகத் தமது வாழ்வின் பெரும் பகுதியை இரும்புக் கம்பிகளின் பின்னால் தடுப்புக் காவலில் சிக்கிக் கிடந்து அனுபவிக்கும் தண்டனை முறை பின்பற்றப்படுகிறது.**

**குற்றம் நிரூபிக்கப்படாத சந்தேக நபர்களை விசாரணைக்காகத் தடுத்து வைக்கும் விளக்கமறியல் பொறிமுறையையே, தடுப்புக் காவல் பொறிமுறையாக மாற்றி, பல பத்தாண்டுகளைத் தாண்டியும் விசாரணைக் கைதிகள் என்ற பெயரில் சிறையில் வைத்துத் தண்டிக்கும் கொடூரத்தை இலங்கையின் நீதித்துறை சட்டத்தின் ஆட்சி என்ற பெயரில் வெகு'சிம்பிள்' ஆகப் பின்பற்றி வருகின்றது.**

**குற்றம் நிரூபிக்கப்படாதவர்களை இப்படி வருடக் கணக்கில் தடுப்புக் காவலில் வைத்து வாட்டும் இயற்கை நீதிக்கு முரணான கொடூரத்துக்கு நாட்டின் நீதித்துறையும் கரிசனை – பிரக்ஞை – ஏதுமின்றித் தொடர்ந்து முழு ஒத்துழைப்பு வழங்குவதுதான் மோசமான நிலைமையாகும்.**

**பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் போதிய ஆதாரங்கள், சாட்சியங்கள், ஆவணங்கள் இல்லாமல் பலவாண்டுகள் தடுப்புக் காவலில் பல நூறு பேரைத் தடுத்து வைத்து அவர்களின் வாழ்வைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கியமைக்குத் துணை போன பெருமைக்கும் மாண்புக்கும் உரியது இலங்கையின் நீதித்துறை.**

**கறுப்பு அங்கி அணிந்து, நீதிதேவதையின் பெயரால் மாதாந்தம் வேதனம் பெறும் இலங்கை சட்டவறிஞர்களுக்குக் கூட இந்தக் கொடூரம் குறித்து பிரக்ஞை இல்லாதிருப்பது நாட்டின் துரதிஷ்டம்.**

## சப்ரகமுவ மஹா சமன் தேவாலய புதிய சமாதி புத்தர் சிலைக்குப் பிரதமர் முதல் மலர் பூஜை!



வரலாற்று சிறப்புமிக்க சப்ரகமுவ மஹா சமன் தேவாலய வளாகத்தில் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட சமாதி புத்தர் சிலை திறந்துவைப்பு மற்றும் முதலாவது மலர் பூஜை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இரத்தினபுரி ஸ்ரீ சுமனாராம விகாரஸ்தானாதிபதி வணக்கத்திற்குரிய கரவிட உபனந்த தேரர், புதிய சமாதி புத்தர் சிலையை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ புத்தர் சிலைக்கு முதலாவது மலர் பூஜை நிகழ்த்தினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவிற்கமைய சமாதி புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டதுடன், அதற்கான நிர்மாணப்பணிகளை அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருந்தது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக வேந்தரும், பொத்குல் ரஜமஹா விகாரை மற்றும் பெல்மதுல்ல ரஜமஹா விகாரை ஆகியவற்றின் உபய விகாராதிபதி வணக்கத்துக் குரிய பெங்கமுவே ஸ்ரீ தம்மதின்ன தேரர் இதன்போது அனுசாசனம் நிகழ்த்தினார்.

சப்ரகமுவ மஹா சமன் தேவாலயத்தின் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் புண்ணிய நிகழ்வுகளின் முக்கியத்துவம் தொடர்பாக சுட்டிக்காட்டிய வணக்கத்திற்குரிய தேரர், புத்தசாசன அமைச்சு போன்றதொரு அமைச்சு அது தொடர்பிலான புரிதலைக் கொண்ட பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறித்து பாராட்டு தெரிவித்து அனுசாசனம் நிகழ்த்தினார்.

கொடகவெல ஸ்ரீ மஹிந்த மஹா விகாராதிபதி, சியம் மஹா நிகாயவின் மல்வத்து பீடத்தின் சப்ரகமுவ மாகாண நீதிமன்ற சங்க நாயக்கர் கொம்பிடியே சுசீல தேரரும் இதன்போது அனுசாசனம் செய்தார்.

இந்நாட்டில் குளங்களும் தாதுகோபுரங்களும் மன்னர்களாலேயே நிர்மாணிக்கப்பட்டன என்ற கலாசாரத்தை மாற்றி பிரதமர் அண்மையில் அனுராதபுரத்தில் சந்தஹிரு சேய தாதுகோபுரத்தை நிர்மாணித்தார்.

இவ்வாறு பல புண்ணிய நிகழ்வுகளை மேற்கொள்ளும் நாம் எப்போதும் நேசிக்கும், நாம் எப்போதும் மதிக்கும் மற்றும் நாம் எப்போதும் நம்பிக்கை கொண்டிருக்கும் எமது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் மிகுந்த பலம் பெற பிரார்த்திக்கிறோம்.

இன்னும் மூன்று தினங்களில் பிறக்கவிருக்கும் 2022 ஜனவரி 01 ஆம் திகதி முதல் இந்நாட்டை புதிய பாதையில் பயணிக்க செய்வதற்கு உங்களுக்கு பலமும் தைரியமும் கிடைக்கட்டும்! என ருவண்புரவில் எட்டு தொகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மஹா சங்கத்தினர் பிரார்த்திக்கின்றனர் என்று கொம்பிடியே சுசீல தேரர் குறிப்பிட்டார்.

சமாதி புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்வதற்கான நிர்மாணப் பணிகளில் ஈடுபட்ட அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் இதன்போது பிரதமரால் பாராட்டப்பட்டு அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மஹா சமன் தேவாலயத்துக்கு விஜயம் செய்த பிரதமர், பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

## சவூதி நிதிய பிரதிநிதியை சந்தித்தார் ரவூப் ஹக்கீம்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், சவுதி அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுல்தான் அல் மர்ஷாத் மற்றும் இலங்கைக்கு பொறுப்பாக இருக்கின்ற பொறியியலாளர் அல் மஸூத் ஆகியோரை நேற்று (புதன்கிழமை) சந்தித்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்தார்.

இதன்போது நாட்டின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடினார் எனவும், நாட்டின் அபிவிருத்திக்கு சவுதி அபிவிருத்தி நிதியம் மூலம் உதவ உள்ளதாகவும் சவுதி அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார் எனத் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

இதன் போது அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கும் கலந்து கொண்டனர்.

## ஆபாசக் கருத்துக்களை வெளியிடுகின்றமை; வர்த்தமானியை ரத்துச் செய்ய சப்றி பணிப்பு!

கொழும்பு, டிசெ.30

ஆபாசமான வகையில் கருத்துக்களை வெளியிடுவதைத் தடைசெய்து தயாரிக்கப்பட்ட சட்டம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்யுமாறு நீதி அமைச்சர் அலி சப்றி பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நீதி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பீ.கே. மாயாதுன்ன வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறு வயது பிள்ளைகளின் நலன்கள் மற்றும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் பெண்கள் உள்ளிட்டோரின் தனிப்பட்ட பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டே இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதே தவிர கருத்து சுதந்திரத்தை முடக்குவதற்காக அல்ல.

இது தொடர்பில் சிவில் அமைப்புக்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், குற்றவியல் சட்டங்கள் மறுசீரமைப்பு தொடர்பான உப குழு மற்றும் இந்த விடயத்தில் பொறுப்புடன் செயற்படுவோரது நிலைப்பாடுகள் கோரப்பட்டு, அவற்றை உள்ளடக்கிய திருத்தங்களுடன் குறித்த சட்ட மூலத்தை மீள சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அண்மையில் வெவ்வேறு தரப்பினரால் மாறுபட்ட நிலைப்பாடுகளும், விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனவே, மேற்கூறப்பட்டவாறு திருத்தங்களை உள்ளடக்கிய சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் வரை, ஏற்கனவே இது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்யுமாறு நீதி அமைச்சர் அலி சப்றி பணிப்புரை விடுத்துள்ளார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஜோர்தான் நாடாளுமன்றத்தில் கடும் மோதல்



ஜோர்தான் நாடாளுமன்றத்தில் எம்.பிக்களுக்கு இடையேயான வாக்குவாதம் கைகலப்பாக மாறி, ஒருவரையொருவர் தாக்கிக் கொண்ட வீடியோ வெளியாகியுள்ளது.

தலைநகர் அம்மானில் நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத் தொடரில், அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மீதான விவாதத்தின் போது தேவையற்ற கருத்துக்களுக்காக உறுப்பினர் மன்னிப்பு கேட்க மறுத்தமையால், ஏற்பட்ட வாக்குவாதம் சிறிது நேரத்தில் கைகலப்பாக மாறியது. ஒருவரையொருவர் மாறி மாறி தாக்கிக் கொண்டதால் அவையில் பதற்றம் நிலவியது.

இது குறித்து பேசிய எம்.பி. கலீல் அத்தியே இந்த நடத்தை மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் நாட்டின் நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் சென்றார் பலஸ்தீன ஜனாதிபதி

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் நேற்று செவ்வாய்க்கிழமை இஸ்ரேலுக்கு பயணம் செய்து, இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் பென்னி காண்ட்ஸை சந்தித்தார்.

பாதுகாப்பு மற்றும் சிவில் விவகாரங்கள் குறித்து இதன்போது இருவரும் பேசினர் என இஸ்ரேல் பாது காப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் இஸ்ரேலுக்கான மிக அரிதான பயணங்களில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

இந்தப் பேச்சின் போது பொருளாதார மற்றும் சிவில் விவகாரங்களில் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இருவரும் இணங்கினர் என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் பிற்பகுதியில் பலஸ்தீனத்துக்கு விஜயம் செய்த இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் பென்னி காண்ட்ஸ், பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை சந்தித்துப் பேசினார்.

பல வருடங்களின் பின்னர் இஸ்ரேல் – பலஸ்தீனம் இடையே இடம்பெற்ற முதல் உயர்மட்ட உத்தியோகபூர்வ சந்திப்பாக இது அமைந்திருந்தது.

எனினும் இந்தப் பேச்சுக்குப் பின்னர் கருத்து வெளியிட்ட இஸ்ரேல் பிரதமர் நப்தலி பென்னட், பலஸ்தீனியர்களுடன் எந்த சமாதான முன்னெடுப்புகளும் நடக்கவில்லை. அது நடக்காது என தெரிவித்தார்.

இதற்கிடையே பென்னி காண்ட்ஸ் – மஹ்மூத் அப்பாஸ் இடையிலான சந்திப்புக்கு இஸ்ரேலிய எதிர்க்கட்சியான லிகுட் கண்டனம் தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை என லிகுட் கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.





பாலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு முயற்சிகள் தொடரும் நிலையில் இரு தரப்பு உறவுகள் சமீபத்திய ஆண்டுகளில் கணிசமாக மோசமடைந்துள்ளன.

லிகுட் தலைவர் பெஞ்சமின் நெதன்யாகு 2009 முதல் 2021 வரை பிரதம மந்திரியாக இருந்த போது, 2014 இல் இஸ்ரேல் – பலஸ்தீனம் இடையிலான அமைதிப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் யூதக் குடியேற்றங்கள் விரிவடைந்தன.

கடந்த ஜூன் மாதம் பொறுப்பேற்ற இஸ்ரேலின் கூட்டணி அரசின் பிரதமராக பலஸ்தீனிய அரசமைப்பை எதிர்க்கும் குடியேற்றப் பரப்புரைக் குழுவின் முன்னாள் தலைவரான வலதுசாரி நப்தலி பென்னட் தற்போது உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தல் காலத்தை குறைத்தது அமெரிக்கா

அறிகுறி தென்படாத கொரோனாத் தொற்று நோயாளிகளுக்கான தனிமைப்படுத்தல் நாள்களை 10 இல் இருந்து ஐந்தாக அமெரிக்க சுகாதார அதிகாரிகள் குறைத்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து மற்ற ஐந்து நாள்களுக்கு ஏனையவர்களை சந்திக்கும்போது முகக்கவசம் அணிய வேண்டும் என்ற கட்டுப்பாட்டையும் விதித்துள்ளனர்.

அறிகுறிகள் தென்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பும் மூன்று நாட்களுக்குப் பிறகும் பெரும்பாலும் கொரோனாத் தொற்று பரவலாம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இப்போது அமெரிக்காவில் ஒமிக்ரோன் தொற்று ஆதிக்கம் செலுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டெல்டா மற்றும் ஒமிக்ரோன் கலவை ஆபத்தான பேரலை

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

டெல்டா மற்றும் ஒமிக்ரோன் திரிவுகளின் கலவையானது, கொவிட் எண்ணிக்கையில், ஆபத்தான பேரலையை உருவாக்குவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது, சுனாமி போன்று ஆபத்தான பேரலை என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரொஸ் அதனம் கெப்ரியேஸஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பதிவாகும் அதிகளவான புதிய நோயாளர்கள் பதிவாகின்ற நிலையில், அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பாவில் அதிகமான நாளாந்த நோயாளர் எண்ணிக்கையாக, 2 லட்சத்து 8 ஆயிரம் பேர் பிரான்ஸில் பதிவாகியுள்ளனர்.

ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் தரவுகளின்படி, அமெரிக்காவில் கடந்த வாரத்தில் நாளொன்றுக்கு 2 லட்சத்துக்கும் மேற்பட்ட புதிய நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

டென்மார்க், போர்த்துக்கல், ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலிய முதலான நாடுகளில், அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தற்போதைய நிலையில், சர்வதேச ரீதியில் நாளாந்தம் சுமார் 9 லட்சம் கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

# ஈலோன் மஸ்க் நிறுவனம் மீது சீனா புகார்



ஈலோன் மஸ்கின் ஸ்டார்லிங்க் இணைய சேவை திட்டத்தின் ஒரு பகுதியாக ஏவப்பட்ட செயற்கை கோள்களுடனான மோதலைத் தவிர்க்க, சீனாவின் விண்வெளி நிலையம் நடவடிக்கை எடுக்க வேண்டி வந்தது என சீனா புகார் கொடுத்துள்ளது. இதன் பின் ஈலோன் மஸ்க் சீன சமூக ஊடகங்களில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்த ஆண்டில், சீனாவின் விண்வெளி நிலையம் இரண்டு முறை ஸ்டார்லிங்க் செயற்கை கோள்களுடன் மோதும் நிலை ஏற்பட்டது என்கிறது சீனா.

ஐக்கிய நாடுகள் சபையின் விண்வெளி முகமையிடம் கொடுக்கப்பட்ட புகார் மற்றும் அதற்கு பின்னுள்ள சம்பவங்கள் குறித்து சுயாதீனமாக சரிபார்க்கப்படவில்லை.

உலகின் நம்பர் 1 பணக்காரராக வலம் வரும் ஈலோன் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம்தான், ஸ்டார்லிங்க் என்கிற செயற்கை கோள் இணைய நெட்வொர்க்கை இயக்கி வருகிறது.

ஏற்கனவே ஈலோன் மஸ்கின் மின்சார வாகன நிறுவனமான டெஸ்லா, சீன நெறிமுறையாளர்களால் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவது நினைவுகூரத்தக்கது.

ஜூலை 1 மற்றும் ஒக்ரோபர் 21 ஆகிய இரு திகதிகளில் அச்சம்பவங்கள் நடந்தன என ஐக்கிய நாடுகளின் 'ஆபீஸ் பார் அவுட்டர் ஸ்பேஸ் அபயர்ஸ்' என்கிற அமைப்பிடம் சீனா சமர்ப்பித்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களைக் கருதி, சீன விண்வெளி நிலையம் மோதலைத் தவிர்க்கும் கட்டுப்பாடுகளை செயல்படுத்தியது என சீனா தன் முகமையின் வலைதளத்தில் பிரசுரித்துள்ள ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவின் புகார் பொதுவெளியில் வந்த பின், ஈலோன் மஸ்க், அவரது ஸ்டார்லிங்க் திட்டம், அமெரிக்கா என பல தரப்பினரும் சீனாவின் டுவிட்டர் என்றழைக்கப்படும் வைபோவில் கடுமையாக விமர்சிக்கப்பட்டனர்.

ஸ்டார்லிங்க் விண்வெளி குப்பைகளின் குவியல் என ஒரு பயனர் விமர்சித்திருந்தார்.

இந்த செயற்கைக் கோள்கள் அமெரிக்காவின் விண்வெளிப் போர் ஆயுதங்கள் என்றும், மஸ்க் அமெரிக்க அரசாலும் இராணுவத்தால் உருவாக்கப்பட்ட புதிய ஆயு தம் என்றும் மற்றொருவர் விமர்சித்துள்ளார்.

ஸ்டார்லிங்கின் அபாயங்கள் மெல்ல வெளிப்படத் தொடங்கியுள்ளன, அவர்களின் வணிக நோக்கிலான நடவடிக்கைகளுக்கு ஒட்டுமொத்த மனித இனமே பெரிய விலை கொடுக்கும் என மற்றொரு பதிவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அமெரிக்கா விண்வெளி உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிபந்தனைகளை மறுப்பதன் மூலம், விண்வெளி வீரர்களை அபாயத்தில் ஆழ்த்துகிறது என சீனா குற்றம்சாட்டியது.

அமெரிக்கா பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும் என சீனா வலியுறுத்துவதாக சீனாவின் வெளிவிவகாரத்துறை செய்தித் தொடர்பாளர் சாவ் லிஜியன் கூறினார்.

விண்வெளியில் செயற்கைக் கோள்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும் அபாயம் இருப்பதாக விஞ்ஞானிகள் தங்கள் கவலையை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும், பூமியைச் சுற்றி வரும் சுமார் 30,000 செயற்கைக் கோள்கள் மற்றும் விண்வெளிக் குப்பைகள் குறித்த விவரங்களைப் பகிர்ந்து கொள்ள உலக நாடுகளுக்கு விஞ்ஞானிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஏற்கனவே ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் கிட்டத்தட்ட 1,900 செயற்கைக் கோள்களை ஸ்டார்லிங்க் திட்டத்தின் ஒரு பகுதியாக விண்வெளிக்கு அனுப்பியுள்ளது, மேலும் 1,000 செயற்கைக் கோள்களை ஏவ உள்ளது.

கடந்த மாதம் நாசா, சர்வதேச விண்வெளி நிலையத்தில் நடத்த வேண்டிய விண்வெளி நடைப்பயணத்தை, விண்வெளிக் குப்பைகள் காரணமாக திடீரென ஒத்தி வைத்தமையும் இங்கு நினைவுகூரத்தக்கது.

# நாகலாந்தில் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் எதிர்ப்புகளுக்கிடையில் மேலும் 6 மாதங்கள் நீடிப்பு




ஜம்மு - காஷ்மீர் மற்றும் அசாம், மேகாலயா, மணிப்பூர், நாகலாந்து, அருணாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் இந்திய மத்திய அரசின் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் அமுலில் உள்ளது.

போடோலாந்து, நக்சலைட், மாவோயிஸ்ட், நாகா விடுதலை முன்னணி ஆகிய அமைப்பினரின் ஆதிக்கத்தில் உள்ள பகுதிகளில் வன்முறையில் ஈடுபடுவோர் மற்றும் பொதுச் சொத்துக்களை நாசப்படுத்துவோரை உடனடியாக கைது செய்யவும், தேவை ஏற்படும்போது தற்காப்புக்காக சுட்டுக் கொல்லவும், சந்தேகத்துக்குரிய பகுதிகளில் முன் அனுமதியின்றி சோதனை நடத்தவும் துணை இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் இந்த சட்டம் அதிகாரம் அளிக்கிறது.

இந்தநிலையில் நாகலாந்து மாநிலம் முழுவதையும் இடையூறு மிக்க பகுதியாக அறிவித்து அங்கு பல ஆண்டுகளாக அமுலில் உள்ள ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்படுவதாக இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் இன்று அறிவித்துள்ளது.

நாகாலாந்தின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வரும் சமூக அமைப்புகளும், அம்மாநில அரசும் மத்திய அரசின் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என வலியுறுத்தி வந்துள்ளன.

கடந்த டிசெம்பர் 4 ஆம் திகதி நாகாலாந்தில் பயங்கரவாதிகள் என்று நினைத்து, சுரங்கத் தொழிலாளர்கள் பயணம் செய்த வாகனம் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதில் 13 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதற்கு அம்மாநிலம் முழுவதும் கடும் எதிர்ப்பு கிளம்பியது. அப்பாவி மக்கள் மரணிப்பதற்கு காரணமாக இருக்கும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என பலரும் குரல் கொடுக்கத் தொடங்கினர்.

இதையடுத்து டிசெம்பர் 20 ஆம் திகதி, வடகிழக்கு மாநிலங்களில் அமுலில் இருக்கும் ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று நாகாலாந்து சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


நாகலாந்தில் இச்சட்டத்தை திரும்ப பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய 5 நபர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இராணுவ வீரர்களின் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு நீதி பெற்றுத்தரும் வகையில் மாநில அரசால் சிறப்பு விசாரணைக் குழுவும் அமைக்கப்பட்டது. இருப்பினும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவ வீரர்கள் மீது மாநில அளவிலான குழுவால் எப்படி முழுமையான விசாரணை நடத்த முடியும் என்ற கேள்வி எழுந்துள்ளதாக மனி உரிமைச் செயற்பாட்டாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# பா.ஜ.க.– அமரிந்தர் கட்சி கூட்டணி பஞ்சாப்பில் உறுதிப்படுத்தப்பட்டது



பஞ்சாப் சட்டப்பேரவைத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி, முன்னாள் முதலமைச்சர் அமரிந்தர் சிங்கின் கட்சியுடன் கூட்டணி அமைத்து போட்டியிடும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சித் தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பஞ்சாப் மாநில முதலமைச்சர் பதவியிலிருந்து சில மாதங்களுக்கு முன் கப்டன் அமரிந்தர் சிங் விலகியிருந்தார். இதன் பின் பஞ்சாப் லோக் காங்கிரஸ் என்ற கட்சியை அவர் தொடங்கினார். இந்த நிலையில் பாரதிய ஜனதாக் கட்சியுடன் அமரிந்தர் சிங்கின் கட்சி கூட்டணி அமைத்துள்ளது. இந்தக் கூட்டணியில் சிரோன்மணி அகாலிதள் கட்சியிலிருந்து பிரிந்து வந்து தனிக்கட்சி தொடங்கியுள்ள சுக்தேவ் சிங் திண்ட்சாவின் கட்சியும் இணைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




# புத்தாண்டுத் தினத்தில் மதத்தலங்களுக்கு செல்வதற்கு தடையில்லையென அறிவிப்பு

தமிழகத்தில் கொரோனா மற்றும் ஒமிக்ரோன் தொற்றுகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதனால் தமிழகம் முழுவதும் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடற்கரைகளில் புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்கு தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக புத்தாண்டு பிறக்கும் சமயத்தில் மத வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வது குறித்த குழப்பங்கள் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தன. இதுகுறித்து தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு விளக்கமளித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்மன் கோவில், உலகளந்த பெருமாள் கோவில், ஏகாம் பரநாதர் கோவில் ஆகிய கோவில்களை ஆய்வு செய்த பின்னர் நிருபர்களுக்கு பேட்டி அளித்த அமைச்சர், காலம் காலமாக ஆங்கிலப் புத்தாண்டுத் தினத்தில் நள்ளிரவு 12 மணிக்கு எந்தெந்த மதத்தலங்களில் வழிபாடுகள் நடைபெறுமோ அங்கெல்லாம் வழிபாடுகள் நடத்த தடையில்லை. பக்தர்கள் எந்தத் தயக்கமும் இல்லாமல் சென்று வழிபாடு நடத்தலாம். தி.மு.க. அரசு ஆன்மீகத்திற்கு எதிரான அரசு அல்ல.

அதேநேரம், தற்போதைய பெருந்தொற்று அபாயத்தைக் கருத்தில் கொண்டு மக்கள் கட்டுப்பாடுகளை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். கண்டிப்பாக முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். இடைவெளியை கடைப்பிடித்து வழிபாடு செய்யச் செல்ல வேண்டும், என்று தெரிவித்துள்ளார்.



# இந்தியாவில் ஒமிக்ரோன் பாதிப்பு ஆயிரத்தை நெருங்குகின்றது

இந்தியாவில் ஒமிக்ரோன் திரிவு மிக வேகமாக பரவி வருகிறது. நேற்றுக் காலைவரை 781 பேருக்கு ஒமிக்ரோன் பாதிப்பு இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று மாலை அது 900 ஐத் தாண்டியுள்ளது.

இன்று காலை நிலைவரப்படி இந்தியா முழுவதும் 961பேருக்கு ஒமிக்ரோன் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. 22 மாநிலங் களில் ஒமிக்ரோன் பரவி இருப்பதாகவும் அந்தத் தகவ லில் கூறப்பட்டுள்ளது.

டெல்லி, மகாராஷ்டிரா ஆகிய இரு மாநிலங்களிலும் ஒமிக்ரோன் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு எகிறத் தொடங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. டெல்லியில் 263 பேரும், மகாராஷ்டிராவில் 252 பேரும் ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குஜராத்தில் 97, ராஜஸ்தானில் 69, கேரளாவில் 65, தெலுங்கானாவில் 62 பேருக்கு ஒமிக்ரோன் பாதிப்பு இனங்காணப்பட்டுள்ளது. தமிழகத்தில் 46 பேர் ஒமிக்ரோன் பாதிப்புடன் இருப்பவர்களாகக் கண்டறியப்பட்டிருக்கின்றனர்.

இதுவரை ஒமிக்ரோன் பாதித்த 961பேரில் 320 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், அவர்களில் பெரும்பாலா னவர்கள் மருத்துவமனைகளிலிருந்து வீடு திரும்பி யுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஏனையவர்க ளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், அவர்கள் அனைவரும் சீரான உடல் நலத்துடன் இருக்கின்றனர் எனவும் இந்திய மத்திய சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

# திருகோணமலை ஈஸ்வரபுரம் பொது மைதானம் தனிநபர் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட்டம்!



திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஈஸ்வரபுரம் மற்றும் மோரிக் கிராமம் ஆகிய பகுதிகளில் வசித்து வந்த பொதுமக்கள் பயன்படுத்திய பொது மைதானம் இரவோடு இரவாக தனிநபர் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டமையை எதிர்த்து குறித்த கிராம மக்களால் நேற்று புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் புதிதாக குடியேறுவதற்காக குறித்த மாதிரிக் கிராமம் முன்மொழியப்பட்டு அங்கே வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டு தற்போது அங்கே 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன எனத் தெரிவித்தனர்.

குறித்த கிராமத்தில் பொதுத் தேவைகளுக்காக ஒன்றுகூடல் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்காக தம்மால் இவ்வளவு காலமும் பயன்படுத்தப்பட்ட குறித்த காணிப் பகுதி திடீரென ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கே எல்லைக் கற்கள் நடப்பட்டமையை அடுத்து இந்த விடயம் தொடர்பாக தாம் பிரதேச செய லாளரிடமும் கிராம சேவகரிடமும் அறிவித்த போதிலும் தமக்கு சரியானதொரு பதில் கிடைக்கவில்லை என்ப தால் இது அதிகார மட்டங்களில் இருப்பவர்கள் தமது சுய அதிகாரத்தைப் பயன்படுத்தி தன்னிச்சையாக செயற்படுகின்றார்கள் எனத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

மேற்படி காணிப் பகுதியில் சிறுவர் பாடசாலை மற்றும் விளையாட்டு மைதானம் ஒன்றும் அமைப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த வருடம் ஏற்பட்ட கொரோனா பேரிடர் காரணமாக அந்த முயற்சி தடைப்பட்டதாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மேற்படி காணி பிறிதொருவருக்கு கொடுக்கப்பட்டமைதம்மை வேதனைக்கு உள்ளாக்குகிறது எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொண்டு தமது விளையாட்டு மைதானத்தினையும் பொது ஒன்றுகூடல்களை முன்னெடுப்பதற்காக தம்மால் பயன்படுத்தப்பட்ட காணியை மீட்டுத்தருமாறும் குறித்த கிராம வாசிகள் கோரிக்கை விடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட

## தொழில் நிபுணர்களுடன் ஜீ.எல். பீரிஸ் சந்திப்பு

வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கிடையிலான சிநேகபூர்வமான சந்திப்பொன்று மட்டக்களப்பில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட வல்லுநர்கள் கலந்துகொண்டமையுடன்,கலந்துரையாடலின் போது, அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், தேர்தல் சீர்திருத்தங்கள், கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் நாட்டின் சமூக – அரசியல் வெளியுறவுக் கொள்கை மற்றும் வெளிநாட்டு உறவுகள் குறித்தும் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் அதன் மேம்பாடு குறித்தும் ஆழமாகக் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனங்களுக்கிடையே ஐக்கியத்தைக் கட்டியெழுப்பும் விசேட கலந்துரையாடல் மட்டக்களப்பில் நடந்தது

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனங்களிடையே ஐக்கியத்தையும் சமாதானத்தையும் சர்வமதத்தின் ஊடாக கட்டியெழுப்பும் வகையிலான விசேட கலந்துரையாடல் நேற்று (புதன்கிழமை) நடைபெற்றது.

மட்டக்களப்பு தன்னாமுனை மியானி தொழில்நுட்ப கல்லூரி மண்டபத்தில் சிவில் அமையத்தின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

சிவில் அமையத்தின் பணிப்பாளர் கண்டுமணி லவகுகராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் இஸ்ஸதீன் சர்வமத குழு அமைப்பு உறுப்பினர்களிடமிருந்து இனங்களுக்கிடையிலான நல்லிணக்க கலந்துரையாடல் என்னும் தலைப்பில் விசேட கலந்துரையாடலை முன்னெடுத்தார்.

இதன்போது மாவட்டத்தில் இனங்களிடையே ஒன்றுபட்ட நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கருத்தாடல்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிவில் அமையத்தின் திட்ட இணைப்பாளர் ஜெயராமன்கோபிநாத்,கள இணைப்பாளர் இராசுரமேஸ்,ஸ்டான்லி



அனுஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் சர்வமத பிரதிநிதிகள்,கிராம மட்ட நல்லிணக்க செயற்பாட்டு குழுக்களின் உறுப்பினர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

## கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் 200ஆவது கொடியேற்ற விழா கூட்டம்

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகையின் 200 ஆவது கொடியேற்ற விழா எதிர்வரும் ஜனவரி 04ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதை முன்னிட்டு அது தொடர்பான விசேட கூட்டம் கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.ரக்கீப் தலைமையில் கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றது.

200 ஆவது கொடியேற்ற விழாவை இம்முறை சிறப்பாக அரச விழாவாகக் கொண்டாடுவதற்கு இந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதுடன், 200 ஆவது நினைவாக நினைவு முத்திரை ஒன்றை எதிர்வரும் ஜனவரி 06 ஆம் திகதி வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி முத்திரை வெளியீட்டு நிகழ்வுக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் அழைப்பின் பேரில் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகபெரும கலந்து கொண்டு உத்தியோக பூர்வமாக முத்திரையை வெளியிட்டுவைக்கவுள்ளார்.

கல்முனையில் பாரம்பரியமாக நடைபெற்று வரும் இந்தக் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்விற்கு கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட சகல வர்த்தகர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் என சகலரும் ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கல்முனை மாநகர சபை மேயரால் உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டதோடு இந்த விழா சிறப்பாக நடைபெறுவதற்கு விசேடமாக குழு ஒன்றும் முதல்வரால் நியமிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ்.எம். நிசார்(ஜே.பி),ஏ,சி.ஏ. சத்தார்,சட்டத்தரணி ஏ.எம்ரோசன் அக்தர்,ஏ.ஆர் அமீர்,எம்.நவாஸ்,கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி,கல்முனை மாநகர சபை ஆணையாளர் எம்.சீ. அன்சார்,கணக்காளர் ஏ.எச் தஸ்தக்கீர்,கல்முனை ஜும்மா பள்ளிவாசல் மற்றும் கடற்கரைப் பள்ளிவாசல் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் அவர்களின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ.பாவா,இணைப்பாளர் எம்.ஆஸீர் உட்பட பள்ளிவாசல் நிர்வாகிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

## சின்னத்தம்பி சந்திரசேகரம் பேராசிரியராகப் பதவி உயர்வு



கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையின் தலைவராகப் பணியாற்றும் கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம் 15 ஆம் திகதி முதல் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் முதல் தொகுதி மாணவர்களில் ஒருவராகத் தமிழ் விசேட கற்கை நெறியில் கல்வி கற்று விசேட இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணி, கலாநிதிப் பட்டங்களையும் பெற்றார்.

இப்பல்கலைக்கழகத்தில் மொழித்துறையில் தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்ற அவர் தற்போது அத்துறையின் தலைவராகப் பணியாற்றிவருகிறார். அத்துடன் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பட்ட மேற்படிப்புகள் பிரிவின் இணைப்பாளராகவும் பணியாற்றியிருக்கின்றார்.

# மட்டக்களப்பிலிருந்து பனம் பொருள்களை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை முன்னெடுப்பு

### மண்முனை வடக்கு பிரதேச செயலர் தெரிவிப்பு

மட்டக்களப்பிலிருந்து பனம் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் உருவாக்கப்பட்ட சௌபாக்கியா உற்பத்தி கிராமத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் கண்காட்சி நேற்று (புதன்கிழமை) மட்டக்களப்பில் நடைபெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஐந்து கிராமங்கள் சௌபாக்கிய உற்பத்தி கிராமங்கள் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டு அங்கு தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்குப் பயிற்சி மற்றும் நிதியுதவிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

பனிச்சையடி, கொக்குவில், சத்துருக்கொண்டான், சின்ன ஊறணி, திராய்மடு ஆகிய ஐந்து கிராமங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு இங்கு அதற்காக 90 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 127 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான பனை உற்பத்தி தொடர்பான பயிற்சியும் தொழில் முன்னெடுப்புக்கான நிதியுதவியும் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது பனை உற்பத்திப் பொருள்கள் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டதுடன் விற்பனையும் முன்னெடுக்கப்பட்டது.

இவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பனை உற்பத்திப் பொருள்களை பனை அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாகக் கொள்வனவு செய்து வெளிநாடுகளுக்கும் இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்வதற்குமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் இதன்போது தெரிவித்துள்ளார்.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் ஆரம்பமான இந்தக் கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி ல.பிரசந்தன்,உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.சுதர்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சீனாவுடன் மேற்கொண்ட நாணய மாற்று ஒப்பந்தமே அந்நிய செலாவணி கையிருப்பு உயர்வுக்கு காரணம்!

## தகவல் வெளியானது

சீனாவுடனான நாணய பரிமாற்ற ஒப்பந்தம் இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பை சுமார் 310 கோடி டொலர்களாக உயர்த்த உதவியுள்ளது என சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீன மக்கள் வங்கியுடன் 150 கோடி டொலர் நாணய பரிமாற்றம் இறுதி செய்யப்பட்ட பின்னர் கையி ருப்பு அதிகரிக்கப்பட்டது என ஏஜென்சியை மேற் கோளிட்டு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் நாணய பரிமாற்றம் யுவானில் இடம் பெற்றதாகவும் தேவைப்பட்டால் அதை டொலர்களாக மாற்றலாம் என்றும் அறிக்கையிட்டுள்ளது.

நாட்டின் கையிருப்பு சுமார் 310 கோடி டொலர்களாக உயர்ந்துள்ளதாகவும், ஆண்டு இறுதி வரை அந்த அளவில் பேணப்படும் என்றும் நேற்று டுவிட்டரில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் வெளிநாட்டு ஆதரவை உறுதிப்படுத்தியுள்ள இலங்கை மத்திய வங்கி, இருப்பினும் சீனாவுடனான நாணய பரிமாற்ற ஒப்பந்தம் தொடர்பாக எந்தத் தகவலையும் வெளியிடவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக 500 கோடி டொலர்களுக்கு மேல் கடனாக வழங்கிய சீனா இலங்கையின் மிகப் பெரிய இறக்குமதி வருமான ஆதாரமாக உள்ளது.

## உயர்தரப் பரீட்சை மீள்திருத்த பெறுபேறுகள் வெளியாகின!

2020 ஆம் ஆண்டு கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான மீள் திருத்த பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத் திற்குள் பிரவேசித்து பரீட்சை பெறுபேறுகளை பார்வையிட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மின்சாரத் தடைகள் ஜனவரியில் இருக்கா!

ஜனவரி மாத மத்தியிலிருந்து மின்சாரத் துண்டிப்பு இடம்பெறும் என தெரிவிக்கப்படும் கருத்து உண்மைக்கு புறம்பானது என்று அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தகவல்கள் மூலம் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை.

வருடம் முழுவதும் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்க மின்சார சபைக்கு திறன் உண்டு எனவும் அமைச்சர் காமினி லொக்குகே மேலும் குறிப்பிட்டார்.

## இன்றுமுதல் எகிறுகிறது பால் மாக்களின் விலை!

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடக பேச்சாளர் அசோக பண்டார இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய அதிகரிக்கும் விலை தொடர்பான அறிவிப்பை இன்று(வியாழக்கிழமை) வெளியிட எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை கடந்த ஒக்ரோபர் மாதம் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதிகள் தொடர்பில் கலந்துரையாடல்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளகைதிகள்தொடர்பில்கலந்துரையாடப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களம், பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் பொலிஸ் சட்ட பிரிவின் பணிப்பாளர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு நேற்று (புதன்கிழமை) அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போதே குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நிஹால் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

கைதிகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஆணைக் குழுவிடம் உள்ள ஒழுங்குகளுக்கு அமைவாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரச உத்தியோகத்தர்களுக்கு காப்புறுதி உதவி கொடுப்பனவு

கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட அக்ரஹார தேசிய காப்புறுதி நிதியத்தின் அங்கத்தவர்கள் 22 ஆயிரம் பேருக்கு காப்புறுதி உதவி கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக 66 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று ஏற்பட்ட அரச சேவையாளர்கள், பகுதியளவில் பாதிக்கப்பட்ட அரச சேவையாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அரச சேவையாளர்கள் என காப்புறுதி நன்மைகளை பெறுவதற்காக 42 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களுள் 22 ஆயிரம் பேருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன, ஏனையோருக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொவிட் தொற்றுக்கு உள்ளாகி, வைத்தியசாலை அல்லது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்றவர்கள் மாத்திரம் அக்ரஹார காப்புறுதியை பெற தகுதியுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேசிய வாசிப்பு மாதம் - 2020 இல் வலி.தெற்கு பிரதேசசபை முதலிடம்!

### வலி.வடக்கு பிரதேசசபை 3 ஆம் இடம்





கல்வி அமைச்சால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத 2020 ஆம் ஆண்டுக்கான போட்டியில் வடக்கு மாகாணத்தில் வலிகாமம் தெற்கு சுன்னாகம் பொது நூலகம் முதலாம் இடத்தையும் வலிகாமம் வடக்கு அளவெட்டி பொது நூலகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

2 ஆம் இடத்தை வத்தளை ஹெந்தளை பிரதேசத்திலுள்ள பொதுநூலகம் பெற்றுக்கொண்டது.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய நூலக ஆவண ஆக்கல் சபை மண்டபத்தில் அதன் தலைவர் சோனால குணவர்த்தன தலைமையில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்துகொண்டார்.

வடக்கு மாகாணத்தில் இருந்து வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் தவிசாளர் க.தர்சனும் வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தனும் நிகழ்வில் கலந்து தமது ஆளுகைக்குட்பட்ட நூலகங்களுக்கான விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

# இதயம், மூளையில் 230 நாள்கள் கொரோனா வைரஸ் இருக்குமாம்!

## ஆய்வில் தகவல்

கொரோனா வைரஸ் சில நாள்கள் சுவாசப் பாதையில் இருந்து அதன் பிறகு இதயம், மூளை மற்றும் உடலில் உள்ள ஒவ்வோர் உறுப்புகளுக்கும் பரவி பல மாதங்கள் நீடிக்கும் என்று ஓர் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

சார்ஸ் - கோவ் - 2 வைரஸின் பரவல் மற்றும் உடல், மூளையின் நிலைத்தன்மை பற்றிய மிக விரிவான பகுப்பாய்வில் அமெரிக்க தேசிய சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதைக் கண்டறிந்தனர்.

இந்த ஆய்வு முடிவுகள் ஒன்லைனில் வெளியிடப்பட்டன.

இந்த ஆய்வுகளுக்கு தலைமை தாங்கிய செயின்ட் லூயிஸ் ஹெல்த்கேர் சிஸ்டத்தில் உள்ள மருத்துவ தொற்று நோயியல் மையத்தின் இயக்குநர் ஜியாத் அல் - அலி கூறுகையில், கொரோனா வைரஸ் நீண்ட காலம் ஏன் பல உறுப்புகளை பாதிக்கிறது என்று ஆய்வு செய்தோம். லேசான அறிகுறியற்ற மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும் வைரஸ் தொற்று நீண்ட காலம் உடலில் இருக்கும்.

அமெரிக்காவில் தொற்று நோய் பரவிய முதல் ஆண்டில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு இறந்த 44 நோயாளிகளின் பிரேத பரிசோதனையின்போது எடுக்கப்பட்ட திசுக்களை பகுப்பாய்வு செய்தோம்.

அப்போது கொரோனா வைரஸ் தொற்று அறிகுறி தோன்றிய 230 நாள்கள் வரை மூளை முழுவதும் உள்ள பகுதிகள் உட்பட உடலின் பல பாகங்களில் தொடர்ந்து சார்ஸ் - கோவ் - 2 ஆர். என்.ஏ. இருப்பதை ஆய்வுக் குழு கண்டறிந்தது என்றார்.

கொரோனா வைரஸ் பாதிப்பு அளவை கண்டறிய ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு திசு பாதுகாப்பு நுட்பங்களை பயன்படுத்தினர். மேலும் நோய் தாக்கி முதல் வாரத்தில் இறந்த கொரோனா நோயாளிகளிடம் இருந்து நுரையீரல், இதயம், சிறுகுடல் மற்றும் அட்ரீனல் சுரப்பி உள்ளிட்ட பல திசுக்களில் இருந்து சேகரிக்கப்பட்ட வைரஸை வளர்த்தனர்.

அப்போது சார்ஸ் - கோவ் - 2 வைரஸ் நோய் தொற்று காற்றுப் பாதைகள் மற்றும் நுரையீரலில் ஆரம்பத்தில் பரவுகிறது. அதன் பிறகு மூளை மற்றும் பரவலாக முழு உடலிலும் உள்ள செல்களை பாதிக்கலாம் என்பதைத் தங்கள் முடிவுகள் காட்டுகின்றன என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

சார்ஸ் - கோவ் - 2 இதய தசை செல்களை நேரடியாக கொல்லுகிறது. மேலும் நோய்த்தொற்றில் இருந்து குணமடைந்தவர்கள் அறிவாற்றல் குறைபாடுகளால் பாதிக்கப்படுகின்றனர் என்று நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மெக்லின்டைர் தெரிவித்தார்.

பொதுவாக சார்ஸ் - கோவ் - 2 வைரஸ் சிலருக்கு அழிக்கப்படலாம். ஆனால் சிலருக்கு பல வாரங்கள் அல்லது பல மாதங்கள் நீடித்து பல கோளாறுகளை உருவாக்கலாம் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.12.2021இல் வெளியிடப்பெற்றது.